கனம் இராமநாதபுரம் மாவட்ட முதன்மை/அமர்வு நீதிபதி அவர்கள் முன்பாக

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364140

1. District : இராமநாதபுரம் மாவட்டம் PS: ஊ.க.பாரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 09/2026 மு.த.அ. எண் Date: 07.08.2026 நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 Sections பிரிவுகள்: 7(a) & (b) of PC Amendment Act 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 27.07.2026 நாள் முதல் Date to : 19.30 மணி நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.08.2026 Time : நேரம் 11.15 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுதி-II Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ / ~~மின்னணு வடிவம்~~ எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 42 கி.மீ மேற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வருவாய் கோட்டாட்சியர் முகம்ப் ஆலை, பரமக்குடி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S.B. மதாகர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பாலுசாமி

(c) Date / Year of Birth : 53/2026 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி 1/128, கைலாஷ் கிராமம் மற்றும் அஞ்சல் முதுகுளத்தூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. சரவண பெருமாள், வருவாய் கோட்டாட்சியர், பரமக்குடி
2) திரு. சுந்தர், வாகன ஓட்டுநர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பரமக்குடி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் ஏதுமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) -

சமர்ப்பிக்கிறேன்:- M.இராமச்சந்திரன், காவல்துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 07.08.2026 ஆம் தேதி 11.15 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி S.B.பிரபாகர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.சரவணபெருமாள் மற்றும் அவரது வாகன ஓட்டுநர் திரு.சுந்தர் ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும், புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.09/2026 u/s 7 (a) & (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 07.08.2026 ஆம் தேதி 11.45 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் S.B.பிரபாகர், வயது 53/2026,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S.B.Prabakar 7/08/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

07/08/26.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.08.2026 - 11.50 மணி

Name: பெயர் M. இராமச்சந்திரன்
Rank: நிலை .....No. எண் .....
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊதக பிரிவு, இராமநாதபுரம்

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 09/2026 u/s 7 (a) & (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி

த/பெ பாலுசாமி, 1/128 செல்லூர் கிராமம் மற்றும் அஞ்சல், முதுகுளத்தூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் காவல்துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராமநாதபுரம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தமான இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், தென் பொதுக்குடி கிராமம் புல எண் 97/7B ல் உள்ள 1.00.00 ஹெக்டேர் நிலத்தில் மண் எடுத்து, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மாங்குளம் கிராமத்தில் இயங்கி வரும் ஸ்ரீ அருணாட்சியம்மன் பிரிக்ஸ் (யூனிட்-1) சேம்பருக்கு கொண்டு செல்ல அனுமதி வேண்டி கடந்த 09.03.2026ம் தேதி இணைய வழியில் விண்ணப்பம் செய்தேன். எனது ஆன்லைன் விண்ணப்ப எண் 26RMD2206888 ஆகும். இந்நிலையில் கடந்த 18.05.2026ம் தேதி இது குறித்து புலத்தணிக்கை அறிக்கை பெற என்னிடம் பணிபுரியும் திரு.ரமேஷ் என்பவரை RDO அலுவலகம் அனுப்பியபோது RDO டிரைவர் திரு.சுந்தர் என்பவர் அவரிடம் RDO கிட்ட பேசியாச்சி அவரு ஒரு லட்சம் கேட்கிறார் என்று கூறிய தகவலை போனில் என்னிடம் கூறினார். எனவே நான் மேற்படி RDO டிரைவர் சுந்தரிடம் ரமேஷ் போன் மூலமாக பேசியபோது ஆமா அவரு ஒரு லட்சம் கேக்குறாரு என சொல்லவே நானும் அவ்வளவு பணமெல்லாம் தர முடியாது பைல் அப்படியே இருக்கட்டும் என்று சொல்லிவிட்டேன். பின்னர் கடந்த 17.07.2026ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று அங்கு முகாம் பணியிலிருந்த வருவாய் கோட்டாட்சியர் திரு.சரவணபெருமாள் அவர்களை நேரில் சந்தித்து போலி வாரிசு உரிமை சான்றிதழ் சம்மந்தமாக நான் ஏற்கனவே கொடுத்த மனு பல மாதங்களாக நிலுவையில் இருப்பது குறித்து விசாரித்தபோது அவர் சரி பார்க்கலாம் எனக்கூறி சேம்பருக்கு மண் எடுக்குறதுக்கு அப்ளை பண்ணிருந்தீங்கள்ள அது என்னாச்சு என என்னிடம் கேட்டபோது AD Mines யிடம் பெண்டிங்கில இருக்கு என

சொன்னதற்கு அது பிராசஸ் ஆனதுக்கு அப்புறம் மறக்காம வந்து கவனிச்சிட்டு போங்க இதுக்கு நான் இப்போ சம்மன் அனுப்புறதுக்கு ஏற்பாடு பண்றேன் என சொன்னார். அப்போது அங்கே நின்று கொண்டிருந்த RDO டிரைவர் என்னிடம் ஆர்டர் வந்தவுடன் தகவல் சொல்லுமாறு கூறினார். பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ந.க.எண்.77/புமசு/2026 நாள்: 24.07.2026 ன்படி மூன்று மாத காலத்திற்கு மண் எடுத்துச் செல்ல நிபந்தனைகளுடன் உத்தரவு கடந்த 27.07.2026ம் தேதி வழங்கப்பட்டது. அன்றைய தினம் மதியம் சுமார் 03.00 மணியளவில் பரமக்குடி வருவாய் கோட்டாட்சியரின் வாகன ஓட்டுநர் திரு.சுந்தர் என்பவரை நான் போனில் தொடர்பு கொண்டு தென்பொதுவக்குடி ஆர்டர் வாங்கிவிட்டதாக கூறினேன். அதற்கு அவர் நான் RDO சார்கிட்ட சொல்லி விடுகிறேன், RDO சார் உங்கள சாயங்காலம் கேம்ப் ஆபிஸ் வரச்சொன்னாங்க என்று கூறினார். அதன்படி 27.07.2026ம் தேதி இரவு சுமார் 07.30 மணியளவில் பரமக்குடி ஒட்டப்பபாலம் அருகே உள்ள கேம்ப் ஆபிஸ் சென்று வருவாய் கோட்டாட்சியர் திரு.சரவணபெருமாள் அவர்களை நேரில் சந்தித்து விபரம் கேட்டபோது, அவர், மண் எடுத்து செல்ல ஆர்டர்லாம் வாங்கி கொடுத்துட்டேன். எல்லாரும் கொடுக்குற மாதிரி நீங்களும் ரூ.50,000/- கொடுத்துருங்க உங்களுக்கு எந்த பிரச்சனையும் வராம பார்த்துகிறேன் என்று கூறினார். அதற்கு நான் இன்னும் மண் எடுப்பதற்கு அரசாங்கத்திற்கே 15 லட்சம் வரை கட்ட வேண்டி இருக்கு என்னால அவ்வளவு பணம் தர முடியாது என்று சொன்னதற்கு அவர், எல்லாருமே மண் ஓட்டுறத்துக்கு முன்னாடி ரூபாய் கொடுத்துத்துட்டுதான் ஓட்டுறாங்க எனக்கூறி நான் கேட்ட பணத்த சீக்கிரம் ரெடி பண்ணி கொடுங்க என்று கேட்டார். மேலும் உங்களுக்கு இன்னொரு பைலு வேற தாலுகா ஆபிஸ்ல பிராசஸ் ஆயிட்டிருக்குனு சொன்னீங்க அத வேற நான் தான் பண்ணணும் பாத்துக்கோங்க எனக்கூறினார். நானும் வேறு வழியில்லாமல் சரி பார்க்கலாம் என்று சொல்லி வந்துவிட்டேன். இதற்கிடையில் RDO டிரைவர் திரு.சுந்தர் என்னை பலமுறை போனில் தொடர்புகொண்டு எங்க இருக்கீங்க எப்ப வருவீங்க என்று கேட்டதற்கு நானும் ஏதாவது சாக்குபோக்கு சொல்லி சமாளித்தேன். பின்னர் இன்று

(07.08.2026) காலை சுமார் 06.50 மணியளவில் RDO வாகன ஓட்டுநர் திரு.சுந்தர் மீண்டும் என்னை செல்போனில் தொடர்புகொண்டு புது பிராஜெக்ட்டுக்கு தாலுகா ஆபிஸ்ல உங்க பைல் ஓகே ஆயிடுச்சுல அது சம்மந்தமாகவும், RDO சார் ஏற்கனவே சொன்னது சம்மந்தமாகவும் RDO சார் இன்னக்கி வந்து பார்க்க சொன்னாங்க என்று கூறினார். அதன்பின்பு நான் யோசித்து பார்த்து என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.சரவணபெருமாள் மற்றும் அவருக்கு உடந்தையாக உள்ள அவரது வாகன ஓட்டுநர் திரு.சுந்தர் ஆகியோர் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, என்னிடம் மாமூலாக ரூ.50,000/- கேட்ட பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.சரவணபெருமாள் மற்றும் RDO வாகன ஓட்டுநர் திரு.சுந்தர் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) S.B.Prabakar. 07.08.2026. அய்யா, வாதி நிலையம் ஆஜராகி இன்று 07.08.2026 ஆம் தேதி 11.15 மணிக்கு கொடுத்த புகாரைப்பெற்று வாதி மற்றும் எதிரிகளின் முன்நடத்தையை விசாரணை செய்து 11.45 மணிக்கு இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.09/2026 u/s 7 (a) & (b) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

07/08/26.

காவல் துணை கண்காணிப்பாளர்.
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
இராமநாதபுரம்.